**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.269** **நாள் : 15.09.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (16.09.2025) 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (16.09.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-5ல் எண்ணூர் விரைவு சாலையில் உள்ள படவேட்டம்மன் கோவில் திறந்தவெளி இடம், மணலி மண்டலம் (மண்டலம்-2), வார்டு-17ல் வடபெரும்பாக்கம், எம்.ஆர்.எச். சாலையில் உள்ள சமுதாயக் கூடம், இராயபுரம் மண்டலம் (மண்டலம்-5), வார்டு-51ல் காளிங்கராயன் தெருவில் உள்ள அண்ணா திருமண மண்டபம், திரு. வி.க. நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-72ல் புளியந்தோப்பு, டி'காஸ்டர் சாலையில் உள்ள டான் பாஸ்கோ, அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்–7), வார்டு-91ல் முகப்பேர் மேற்கு, மோகன்ராம் நகர், வெள்ளாளர் தெருவில் உள்ள சுப்ரபா மஹால், அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்–8), வார்டு-100ல் செனாய் நகர், டி.பி. சத்திரம் பிரதான சாலையில் உள்ள அண்ணா சமூக கூடம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்–9), வார்டு-113ல் தியாகராயநகர், அபிபுல்லா சாலையில் உள்ள எஸ்.ஜி.எஸ் சபா, கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்–10), வார்டு-135ல் அசோக் நகர், 1வது அவென்யூவில் உள்ள லட்சுமி மஹால், பெருங்குடி மண்டலம் (மண்டலம்–14), வார்டு-181ல் கொட்டிவாக்கம், ஏ.ஜி.எஸ். பிரதான சாலையில் உள்ள கபடி மைதானம், சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம்–15), வார்டு-192ல் நீலாங்கரையில் உள்ள ஆர்.கே. கன்வென்சன் சென்டர் ஆகிய 10 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**